## மொறட்டுவ பல்கலைக்கழகம் - 2016

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரமான விபரமான அறிக்கையொன்று பல்கலைக்கழக உப வேந்தருக்கு 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தினை ஆண்டுதோரும் மீளாய்வு செய்யாதிருந்தமை காரணமாக ரூபா 2,397,553,848 கிரயம் கொண்ட சொத்துக்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்தன. அதற்கமைய, மதிப்பீட்டுக் குறைபாட்டினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 86 ஆம் பந்த்தியின் (உ) பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலான ஒப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

ஏனைய பெறுவனவுகள் ரூபா 23,497,499 மற்றும் ஆய்வு விரிவுரையின் தேறிய பெறுகைகள் ரூபா 13,462,742 ஆகியன நிதிச் செயற்பாட்டிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலினுள் காசு உட்பாய்ச்சலாக பொய்யாக உள்ளடக்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டிருந்ததுடன். அந்த வருமானங்களிற்குரிய விபரமான பட்டோலைகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான திறைசேரி மானியமாக ரூபா 1,353,500,000 கிடைத்திருந்த போதிலும், முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பெறவேண்டிய மானியமாக ரூபா 66,947,711 கழிக்கப்பட்டு எஞ்சிய ரூபா 1,286,552,289 தொகை மீளாய்வாண்டிற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியம் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக திறைசேரியடமிருந்து கிடைத்திருந்த தொகையினை விஞ்சி செய்யப்பட்டிருந்த ரூபா 77,406,825 செலவினம் தவறாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தினால் நடாத்திவரப்படுகின்ற பட்டப்பின் படிப்பு பாடநெறிகள், செயற்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான நிதியக் கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்படுமாயின், பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் படி தொடர்புடைய தரப்பினரின் பரிந்துரைகள் மற்றும் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும், 03 ஆண்டுகளாக செயற்பாடற்றுக் காணப்படுகின்ற 03 நிதியக் கணக்குகளின் இறுதிச் செலவு மீதியான ரூபா 772,525 கூட்டுத்தொகையினையும், 10 ஆண்டுகளிற்கும் மேலாக செயற்பாடற்றுக் காணப்படுகின்ற 02 நிதியக் கணக்குகளின் இறுதிச் செலவு மீதியான ரூபா 1,940,487 கூட்டுத்தொகையினையும் வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அட்டுறு வருமானம் எனக் கணக்கீடு செய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஈ) 14 புலமைப்பரிசில் நிதியங்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 219,186 கூட்டுத்தொகையினை புலமைப்பரிசில் நிதியக் கணக்குகளிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அத்தொகையால் இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான களஞ்சிய இருப்புக்களின் பெறுமதி ரூபா 19,970,817 ஆனதுடன், பட்டோலையின் படி அந்த மீதி ரூபா 19,334,611 ஆனமையால் ரூபா 636,206 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி, முடிவுறா வேலைகளின் பெறுமதி ரூபா 251,323,236 ஆன போதிலும், மூலதன நடவடிக்கைச் சேவைகள் பிரிவின் படி அந்த பெறுமதி ரூபா 235,915,252 ஆனமையால் ரூபா 15,407,985 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

பெறுமதி இனங்காணப்பட முடியாத 07 மின்பிறப்பாக்கிகளுடன் தொடர்புடைய சொத்துப் பதிவேடு மற்றும் பேணுதல் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் 11 பதவியணியினரிடமிருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற இடர் கடன் மீதி ரூபா 889,347 ஆக இருந்ததுடன், அதில் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதியான ரூபா 45,630 கூட்டுத்தொகையும் 05 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட மீதியான ரூபா 145,775 கூட்டுத்தொகையும் 1 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட மீதியான ரூபா 209,666 கூட்டுத்தொகையும் உள்ளடங்கியிருந்தது. அவ்வாறே சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரிக்கையில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.18.1 ஆம் பிரிவின் படி செயற்பட்டிராமை காரணமாக 07 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 613,508 தொகை மேற்படி கடன் மீதியில் உள்ளடங்கியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கற்கை விடுமுறைகளைப் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்றிருந்த 31 விரிவுரையாளர்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறித்த உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டிருந்ததுடன், அவர்களில் இருவரினால் உடன்படிக்கைகள் முறிக்கப்பட்டு முறையே 21 மாதங்கள் மற்றும் 24 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அவர்களிடமிருந்து அறவிடவேண்டிய தொகை கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், ரூபா 37,804,927 அறவிடப்பட வேண்டிய எஞ்சிய 29 விரிவுரையாளர்களிடையே 05 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,933,162 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்காக மாத்திரம் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 24 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 28,871,765 தொகையினை அறவிடுவதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கற்கை விடுமுறைகளைப் பெற்று 1989 ஆம் ஆண்டில் வெளிநாடு சென்றிருந்த விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,122,267 இனை அறவிடுவதற்காக தொடரப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின் பிரகாரம், பல்கலைக்கழகத்தினால் இரண்டாவது தடவையாக விரிவுரையாளர்களிற்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குகையில் உரியவாறு நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றியிருக்காமை காரணமாக தண்டப்பணத்திற்கு உட்பட்டு முறைப்பாடு வலுவிழக்கச் செய்யப்பட்டிருந்தது. வழக்குத் தீர்ப்பின் பிரகாரம், உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டமை சம்பந்தமாக ரூபா 703,311 மற்றும் செலவிடப்பட்ட வழக்குக் கட்டணம் ரூபா 117,300 என்ற வகையில் ரூபா 820,611 இனை பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துதல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் உத்தியோகத்தாரின் கவனயீனம், தாமதம், தவறிழைப்பு காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த இழப்பு தொடர்பில் அந்த உத்தியோகத்தர் தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற வேண்டிய போதிலும், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து அத் தொகையினை அறவிடுவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்களிடையே உடன்படிக்கைகளை முறித்துக்கொண்டிருந்த 10 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு, இணக்கம் தெரிவித்து கடிதங்கள் வழங்கியிருந்த போதிலும், அதற்குரித்தான ரூபா 8,136,685 கூட்டுத்தொகை 01 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அப் பணத்தினை அறவிடுவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் தேசிய நூலகங்கள் ஆவணமாக்கல் சேவைகள் சபையினது தலைவரின் 2004/சுச/1 ஆம் இலக்க 2004 சனவரி 26 ஆந் திகதிய அறிவுறுத்தல் சுற்றிக்கை | நூலகப் புத்தகங்கள் தொடர்பில் 2013 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொருள் மெய்மைய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | (i) குறித்த பணி நிறைவேற்றப்பட்டவுடன் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 06 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 197,829 கூட்டுத்தொகையான முற்பணங்களை தீர்ப்பதற்காக 13 முதல் 33 வரையிலான நாட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன.<br><br>(ii) குறித்த பணிகளிற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை சரியாக மதிப்பீடு செய்திருக்காமை காரணமாக 06 சந்தர்ப்பங்களில் தேவையான தொகையினை விஞ்சி ரூபா 206,704 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 229,602,809 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 220,259,676 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதிசார் விளைவு ரூபா 9,343,133 இனால் பின்னடைந்திருந்தது. வருமானம் ரூபா 449,233,561 இனால் அதிகரித்திருந்த போதிலும், செலவினம் ரூபா 458,576,694 இனால் அதிகரித்தமையே மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது நிதி விளைவுகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 64,407,671 தொகையான பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டில் ரூபா 229,602,809 ஆக மாற்றமடைந்திருந்தது. இருப்பினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு சாதகமான பெறுமதியினைக் கொண்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் ரூபா 665,988,174 ஆகக் காணப்பட்ட அப் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,248,780,499 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

## 3.2 நிறுவனத்தினாலும் நிறுவனத்திற்கு எதிராகவும் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்டரீதியான சம்பவங்கள்

பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி நிறுவனங்களிற்கு எதிராக ரூபா 05 மில்லியன் இழப்பீட்டினைக் கோரி மொரட்டுவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், அந்த வழக்கின் எதிராளிகளால் அந்த வழக்குத் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 05 வெளிவாரி மற்றும் உள்வாரி தரப்பினர்களால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பல்கலைக்கழகத்தின் பிரதான குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- உயர் கல்வியில் சிறப்புமிக்க நிலையம் என்ற சர்வதேச ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- தேசிய பொருத்தப்பாடுடைய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் புதிய படைப்புக்கள் மூலம் சிறந்த நிலையினைப் பெற்றுக்கொள்ளல்.
- தேசிய தேவைப்பாடுகள் மற்றும் தொழில்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் விதத்தில் கல்வியினை வழங்கும் முன்னனி பல்கலைக்கழகமொன்றாதல்.
- அதன் செயற்பாடுகளில் சிறந்த நிலையினை அடைந்துகொள்வதற்காக அறிவியல், பௌதீக மற்றும் சமூக சுற்றாடலொன்றை தோற்றுவித்தல்.
- மானிட உயர் சமூகம், ஒளிமயமான பல்கலைக்கழகம் மற்றும் மாற்றமடைகின்ற சமூகம் என்ற சவால்களை எதிர்கொள்வதற்கேற்ற மனோபாவமுடைய புத்தாக்க மற்றும் திருப்திமிக்க பதவியணியினரையும் மாணவர்களையும் உருவாக்குதல்.
- உயர் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய நிபுணத்துவ சேவைகள் தொடர்பில் முன்னனி உசாத்துணை சேவை வழங்குனராதல்.
- இலங்கையின் அனைத்து தொடர்புடைய துறைகள் மற்றும் உயர் / தொழிற் கல்வியில் கொள்கைகளை வகுக்கையிலும் தேசிய அபிவிருத்தியிலும் அரசாங்கத்திற்கு ஆலோசகராக உருவாகுதல்.
- தரக் கட்டுப்பாடு மற்றும் வினைத்திறனான நிறுவனக் கட்டுப்பாட்டிற்காக பொறிமுறையொன்றை நிறுவனமயமாக்குதல்.

மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் கல்வி நடவடிக்கைகளை விரிவுபடுத்து விளையாட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக இரண்டு காணிகளை சுவீகரிப்பதற்கு ரூபா 1,700 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அக் காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013/2014 ஆம் கல்வியாண்டில் 7 பாடநெறிகளிற்கு 52 மாணவர்கள் வெற்றிடங்களும் 2014/2015 ஆம் கல்வியாண்டில் 8 பாடநெறிகளிற்கு 47 வெற்றிடங்களும் 2015/2016 ஆம் கல்வியாண்டில் 8 பாடநெறிகளிற்கு 57 வெற்றிடங்களும் காணப்பட்டன.

(இ) (i) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, புதிதாக பாடநெறிகளை ஆரம்பிப்பதற்காக பல்கலைக்கழகத்தின் 04 பீடங்களின் 07 துறைகளிற்கு ரூபா 155 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பொறியியல் பீடத்தில் புதிய 02 உள்ளகப் பாடநெறி விடயங்கள் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஏனைய பீடங்களில் எந்தவொரு உள்ளகப் பாடநெறி விடயங்களும் மீளாய்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பொறியியல், வாஸ்து விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பட்டக் கல்வி ஆகிய 04 பீடங்களில் 07, 04, 02 மற்றும் ஒரு பட்டப் பின்படிப்பு பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பொறியியல் பீடத்தில் மாத்திரம் ஒரு பட்டப்பின் படிப்பு பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வியினுள் மாணவர்களின் அறிவு ஆய்விற்குக் காணப்படுகின்ற வசதி வாய்ப்புக்களை விருத்தி செய்யும் நோக்கில் 2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நூலக இடவசதியினை மேம்படுத்தி, நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கும் இலத்திரனியல் கற்பித்தல் வசதிகளை முன்னேற்றுவதற்குமாக ரூபா 42 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், செய்யப்பட்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 9.25 மில்லியனாகும். மேலும், ஏனைய நூலகங்களுடனான வலைப்பின்னல் தொடர்பினை முன்னேற்றுவதற்காக ரூபா 05 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த பணி நிறைவேற்றப்பட்டிருக்காமை காரணமாக நூலக வசதியினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பங்களிப்பு குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் புத்தாக்கங்களையும் பதிய படைப்புக்களையும் மேம்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயற்படு நிலையிலிருந்த 92 ஆய்வுகளிடையே ரூபா 12,001,110 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 16 ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி மீளாய்வாண்டுடன் முடிவடைந்திருந்தது. அத்துடன், 2016 ஆம் ஆண்டில் 63 ஆய்வுகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 45 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 77 சதவீதம் அல்லது ரூபா 34,709,255 அதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) ஆய்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாது போயிருந்தமையால் இரத்துச் செய்தல் அல்லது விலக்கிக்கொள்ளல் இடம்பெற்றிருந்த 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக 03 ஆண்டுகளிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தமை காரணமாக அந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கிருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

நூலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் புத்தகங்களை குறித்த காலத்தில் மீண்டும் கையளித்திருக்காமையால் பல்கலைக்கழக பதவியணியினரிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படாதிருந்ததுடன் புத்தகங்களை மீளக் கையளித்திருக்காத பதவியணியினருக்கு மீண்டும் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மாணவர்களிற்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ரூபா 5,259,288 கூட்டுத்தொகையினைக் கொண்ட 36 நிதியத்திலிருந்து எந்த ஒரு புலமைப்பரிசிலையும் கடந்த 05 ஆண்டுகளின் போது மாணவர்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், புலமைப்பரிசில் நிதியத்திலிருந்து நியாயமான அடிப்படையொன்றின் கீழ் புலமைப்பரிசில்களை வழங்குத் தேவையான நியதிகளை உள்ளடக்கிய நிரந்தர கொள்கையொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 26 திணைக்கள அபிவிருத்தி நிதியங்களில் 17 நிதியங்களிற்காக மீளாய்வாண்டில் எவ்வித நிதி ஏற்பாடுகளும் கிடைக்காதிருந்ததுடன், 09 நிதியங்களிற்காக ரூபா 8,642,678 கூட்டுத்தொகை கிடைத்திருந்தது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 14,359,476 ஆக காணப்பட்டதுடன், அந்த நிதியங்கள் திணைக்களத்தின் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவியணியினர் மற்றும் மாணவர்களது செயற்பாடுகள். ஆய்வுகூட மற்றும் திணைக்கள உபகரணங்கள் அத்துடன் திணைக்கள வேலைகளின் கீழ் செலவு செய்யும் நோக்குடன் பேணிவரப்படுகின்ற 18 பாடநெறி அபிவிருத்தி நிதியங்களின் மீதிகளின் மொத்தம் ரூபா 5,056,707 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 08 நிதியங்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,605,399 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்தன. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,662,106 கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் அந்த நிதியங்கள் எந்தவொரு திணைக்கள அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேணுகைப் பிரிவின் கீழ் செயற்பாட்டு நிலையிலுள்ள பிரதான 07 மின்பிறப்பாக்கி இயந்திரங்களில் 04 இனை தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தியதில் சில மாதங்களில் உச்ச அளவில் மின்சாரம் நுகரப்பட்டிருந்த நாட்களில் செலவாகியிருந்த மின்சார அலகுகளை கருத்திற்கொள்ளாது சிறிய அளவில் மின்சார இயலளவு தேவைப்படுகின்ற இடங்களில் பாரிய இயலளவுடைய மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப கட்டிடத்திற்காக பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 62 சதவீத மின்சார இயலளவும் புதிய விடுதிக்காக பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 83 சதவீத மின்சார இயலளவும் வேலைகள் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 29 சதவீத மின்சார இயலளவும் வீணாகியிருந்ததுடன், இந்த வீணாகின்ற இயலளவினை பயன்பாட்டிற்கு எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேணுகைப் பிரிவின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 274,387 பெறுமதியுடைய 356 லீற்றர் வர்ணப்பூச்சு மற்றும் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்காத 110 லீற்றர் வர்ணப்பூச்சு காலாவதியாகியிருந்தன.

## 4.5 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

முடிவுறாத வேலைகளின் பெறுமதியில் உள்ளடங்கியிருந்த ரூபா 1,273,329 தொகையான "உத்தேச பன்நோக்கு கேட்போர்கூடம்" (Proposed Multipurpose Auditorium) இனை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பல்கலைக்கழகத்தின் அங்கிகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியில் முறையே 68 மற்றும் 56 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், ஒரு களஞ்சிய காப்பாளர் பதவி மேலதிகமாகக் காணப்பட்டது.

## 4.7 கொள்வனவு நடைமுறை

புதிய சிற்றுண்டிச்சாலை தொகுதி 2015 நவம்பர் 24 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான நாற்காலிகள் மற்றும் மேசைகள் என்பன அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகித் தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தன. அதன்படி, 2016 மார்ச் 23 ஆந் திகதி வரையிலான 04 மாதங்களிற்காக பிளாத்திக்கு நாற்காலி ஒன்று ரூபா 20 வீதம் 240 நாற்காலிகளையும் பிளாத்திக்கு மேசை ஒன்று ரூபா 40 வீதம் 50 மேசைகளையும் பெற்றுக்கொண்டமைக்காக தனியார் கம்பனிக்கு ரூபா 745,920 செலுத்தப்பட்டிருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், ஆண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக்கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரங்கள், குறித்த ஆண்டிற்கான பாதீடு கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வும் திட்டம் எனபன 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காய்வு உதவியாளர், மூன்று கணக்காய்வு எழுதுவினைஞர், கணனி தரவு உள்ளீட்டாளர் மற்றும் தொழிலாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்டதாகக் காணப்பட்டது. இவர்களில் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வு உதவியாளர் தவிர்ந்த ஏனையோர் கணக்காய்வு தொடர்பான தொழில்சார் திறன் கொண்டோராகக் காணப்படவில்லை.

### 5.3 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2014 நவம்பர் 20 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவினால் பல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்டுள்ள யுனி கன்சல்டன்சி சேர்விஸ் கம்பனி 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்திற்கு முரணாக தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக அமைச்சரவையின் ஒத்திசைவு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இணங்கியிருந்த போதிலும், 2017 மே 29 ஆந் திகதி வரையிலும், அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டில் முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 3,640,142 தொகையும் முகாமைத்துவ தொழில்நுட்ப வணிக நிர்வாக பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக (MBA in Management Technology) ரூபா 299,415 தொகையும் என்ற வகையில் ரூபா 3,939,557 கன்சல்டன்சி சேர்விஸ் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான குறியீட்டு இலக்கங்களின் கீழ் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) நிறுவனத்திற்குரிய சொத்துக்கள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்காமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | ஒவ்வொரு பணிக்குமாக உரிய விதத்தில் திட்டமிடப்பட்ட பாதீட்டு எதிர்கூறல்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை |
| (இ) | நிதியங்களின் முகாமைத்துவம் | நிதியங்களை ஏற்படுத்திய நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| (ஈ) | களஞ்சிய கட்டுப்பாடு | (i) பொருட்களை கொள்வனவு செய்யும் நடைமுறையின் போது ஆரம்பம் முதல் இறுதியில் பொருட்கள் வழங்கப்படுதல் வரையிலான அனைத்துப் பொருட்களும் களஞ்சியக் காப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தமை. |

|  |  |  |
|---|---|---|
|  |  | (ii) களஞ்சியப் புத்தங்கள் மற்றும் கொள்கல அட்டைகளை நாளதுவரையாக பேணியிருக்காமை மற்றும் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
|  |  | (iii) களஞ்சியக் காப்பாளருக்கு களஞ்சியத்திற்குரிய பணிகள் மாத்திரம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், கடமைப் பட்டியலின் படி பொருட்களை கொள்வனவு செய்தலுடன் தொடர்புடைய பணிகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தமை |
| (உ) | பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடமான பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருக்காமை |
| (ஊ) | கொள்வனவு நடைமுறைகள் | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றியிருக்காமை |
| (எ) | நூலக நிர்வாகம் | நூலகப் புத்தகங்கள் தொடர்பில் சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றியிருக்காமை |